

விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றிய திமுக சார்பில் நாட்டார் மாநிலத்தில் நடைபெற்ற ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார் . அருகில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி உள்ளனர் .

### "உயர்வுக்குப் படி" திட்டத்தின் மூலம்

# மாணவர்கள் செப். 23ஆம் தேதி வரை கல்லூரிகளில் சேரலாம்!

## அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

சென்னை, செப். 13 -

சென்னை, காமராஜர் சாலையில் உயர்கல்வித் துறை அதிகாரிகளுடன் அமைச்சர் முனைவர் க. பொன்முடி உயர்கல்வித் துறைக்குட்பட்ட பல்கலை. பதிவாளர்களுடனும் ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் க.பொன்முடி,

நடப்பாண்டு பொறியியல் படிப்பில் மாணவர் சேர்க்கை அதிகரித்திருப்பதாகவும், கூடுதலாக 15 ஆயிரம் மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

உயர்கல்வித் துறைத் தலைவர்கள் மற்றும் உயர் கல்வித் துறைக்குட்பட்ட பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம், சென்னை காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இதில் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி



கலந்து கொண்டு, 2021-22 முதல் 2024-25 வரையிலான உயர்கல்வித் துறை தொடர்பான அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், நடப்பாண்டு பொறியியல் படிப்பில் கூடுதலாக 15 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளதாக தெரிவித்தார். "உயர்வுக்கு படி" திட்டத்தின் மூலமாக இந்த மாதம் 23ம் தேதி வரை "வராண்டா அட்மிஷன்" மூலமாக மாணவர்கள் கல்லூரிகளில் சேரலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

### அதிக வரி செலுத்தும் மாநிலங்களுக்கு

# நிதிப் பகிர்வை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்!

## தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்ட மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்ற திருவனந்தபுரம் கூட்டத்தில் வலியுறுத்தல்!

திருவனந்தபுரம், செப்.14 -

நிதிப் பகிர்வில் தொடர்ந்து பாரபட்சம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு திருவனந்த புரத்தில் நடைபெற்ற மாநில நிதியமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் அதிக வரி செலுத்தும் மாநிலங்களுக்கு நிதி பகிர்வை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் வலியுறுத்தினார்.

மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி பாகுபாடு காட்டுவது குறித்தும், நிதி புறக்கணிப்பு செய்வது தொடர்பாகவும் கேரளாவில் பா.ஜ.க., ஆட்சி அல்லாத மாநிலங்களின் நிதி யமைச்சர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தை கேரள முதலமைச்சர் பினராயிவிஜயன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, கர்நாடகா வருவாய்த்துறை அமைச்சர் கிருஷ்ணா பைரே கவுடா, தெலுங்கானா துணை முதலமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் மல்லு பட்டி விக்ரமர்கா, பஞ்சாப் நிதி அமைச்சர் ஹர்பால் சிங் சீமா ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து 16 வது நிதி கமிஷனுக்கு அறிக்கை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பேசிய கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், நாட்டின் கூட்டாட்சி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மாநிலங்கள் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசியல் சாசன உரிமைகளையும், உரிய நிதியையும் பெற நீதிமன்றங்களை நாட வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார். மாநிலங்களுக்கான நிதி பகிர்வை ஒன்றிய அரசு 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### வல்லம் வடக்கு, தெற்கு, மத்திய

# ஒன்றியங்களில் கழக செயல்வீரர்கள் கூட்டம்

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு

செஞ்சி, செப்.14-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி வல்லம் வடக்கு, வல்லம் தெற்கு, வல்லம் மத்திய ஒன்றிய திமுக செயல் வீரர்கள் கூட்டம் நாட்டார் மங்கலத்தில் நடைபெற்றது .

ஒன்றிய அவைத் தலைவர்கள் ராமகிருஷ்ணன், ஏழுமலை, வெங்கடேசன் ஆகியோர் தலைமைதாங்கினார்.

ஒன்றிய துணை செயலாளர்கள் வல்லம் வடக்கு ராஜலிங்கம் ,மணிமேகலை ரவிச்சந்திரன், ஞான மூர்த்தி, பொருளாளர்பெருமாள்,மாவட்ட பிரதிநிதிகள் ரவிச்சந்திரன், துரை திருநாவுக்கரசு ,பிரபாகரன், வல்லம் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் கலைவாணி கிருஷ்ண மூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் கண்ணன் அண்ணாதுரை, வல்லம் மத்தியம் பாண்டியராஜன் ஏழுமலை லட்சுமி லட்சுமணன் பொருளாளர் பழனி, மாவட்ட பிரதிநிதிகள் ராமதாஸ் கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் துரை, வல்லம் மத்திய ஒன்றிய செயலாளர் இளம்வழுதி ஆகியோர் அனைவரையும் வரவேற்றார் .

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 இடங்களை பிடிக்க வேண்டும் என்பதை இலக்காக கொண்டுள்ளார் .

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தொலை நோக்கு சிந்தனையால் பல்வேறு திட்டங்களாலும் சாதனைகளாலும் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் திமுக அமோக வெற்றி பெறும் எனவும், எதிர்த்து நிற்கின்ற எதிர்க்கட்சிகள் அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார் .

கூட்டத்தில் கழக முப்பெரும் விழா, பவள விழாவை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் அனைவரது வீடுகளிலும் கழக இருவண்ணகொடியினை ஏற்றி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்குவது, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிவழங்கி கௌரவிப்பது , சென்னையில் செப்டம்பர் 17 நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் திமுக நிர்வாகிகள் திரளாக பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர் .

செயல்வீரர்கள் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், மாவட்ட கவுன்சிலர்கள் சசிகலா மோகனசுந்தரம், அன்பு செழியன், தொழிலாளர் அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன் மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன் . உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் நல்லாட்சியில் பண்ருட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் முதலாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா மற்றும் ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு 5.9.2024 அன்று பண்ருட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் கலந்து கொண்டு மாணவச் செல்வங்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதி வண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றி ஆசிரியர் பெருமக்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர் இந்நிகழ்ச்சியில் விருத்தாச்சலம் மாவட்ட கல்வி அலுவலர் துரைப்பாண்டி தலைமை ஆசிரியர் ஆலமர்செல்வன் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன் நகர அவைத் தலைவர் ராஜா நகர மன்ற உறுப்பினர்கள் சண்முகவள்ளி பழனி லாவண்யா முத்துவேல் அருள் சோழன் கிருஷ்ணராஜ் சமீம் பேகம் சலீம் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் லோகநாதன் வார்டு செயலாளர்கள் வேணு செல்வகுமார் கிருஷ்ணமூர்த்தி இளைஞர் அணி துணை அமைப்பாளர் பார்த்திபன் ராஜா கோபி மற்றும் ஆசிரியர் ஆசிரியைகள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர் தேசிய மாணவர் படை அலுவலர் முனைவர் ராஜா நன்றியுரை கூறினார்



தேசிய வன தியாகிகள் தினத்தை முன்னிட்டு, கோயம்புத்தூர் மாவட்டம், வடகோவையில் உள்ள வன உயர் பயிற்சியக வளாகத்தில் வன தியாகிகள் ஸ்தூபிக்கு நேற்று முன்தினம் (11.09.2024) வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டக் கழக செயலாளர்- அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, செப்.14-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு எடுத்துக்காட்டிய அரசியல் ஆசான், தந்தை பெரியாரின் வரிசாகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அண்ணனாகவும் வாழ்ந்து மறைந்த அறிஞர் அண்ணா அவர்களின்



பிறந்தநாளை முன்னிட்டு 15/09/24 ஞாயிற்று;f கிழமை காலை 8 மணி அளவில் திருச்சி சிந்தாமணியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# ஒன்றிய, நகர, பேரூர்க் கழக சார்பு அணிகளுக்கு விண்ணப்பங்கள்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர் செப். 14 -

கடலூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் வழங்குகிறது என மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை கீழ் வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி , கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆலோசனைப் படி, கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பு



அணிகளின் கீழ்கண்ட அணிகளின் ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு விண்ணப்ப ங்கள் மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம். தணிகை செல்வம். , திருமதி.ஆனந்தி சரவணன் பி. வி.பி. முத்துக்குமார் ஆகியோர் தலைமையில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் 18.09.2024 அன்று வழங்கப்படுகிறது. இதில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசயா தொழிலாளர் அணி, விளையாட்டு அணி , அயலக அணி, மருத்துவர் அணி, வர்தகர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு அணி, சிறுப்பான்மை நல உரிமைப் பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி, நெசவாளர் அணி, மீனவர் அணி, அணிக்கு ஒன்றிய நகர, பேரூர் ஆகிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களை நியமிப் பதற்காக விண்ணப்பங்கள் வழங்கப் படுகிறது. குறிப்பு: ஒன்றிய, நகர , பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடை யாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப் பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால் அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும். இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா! திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருப்பூரில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை! கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

திருப்பூர், செப்.14-

திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் " இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் " மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் திருப்பூரில் பேரறிஞர் அண்ணாவும், தந்தை பெரியாரும் முதன் முதலில் சந்தித்த



இடமான திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் திருவுருவ சிலைகளுக்கு சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படுகிறது.

அது சமயம் திருப்பூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, கிளைக் கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



வர தருமபுரி மேற்கு மாவட்டம் மாரண்டஅள்ளியில் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மாவட்ட பொருளாளர் முருகன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம்,பேரூர் கழக செயலாளர் வெங்கடேசன்,ஒன்றிய அவைத்தலைவர் முருகன், பொருளாளர் துரை,ஒன்றியதுணை செயலாளர்கள் சண்முகம்,அண்ணாமலை, சரிதாகுமார்,மாவட்ட பிரதிநிதி ஜெகநாதன், முத்துராஜ், வெங்கடாஜலம், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜபாட்,நிர்வாகிகள் மாணவர்அணி சந்தர், சாமனூர்மணிவண்ணன், சிவக்குமார்,தர்மன்,புதுர் பழனிசாமி,கவுன்சிலர்கள் ராஜா,நாகராஜ் உள்ளிட்ட கழக தொண்டர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.